செ.வெ.எண்:994                                                    நாள்: 20.12.09

**செய்தி வெளியீடு – 20.12.2009**

**26 கோடி ரூபாய் செலவில்**
**காமராஜர் சாலையையொட்டி**
**நேப்பியர் பாலம் முதல் கலங்கரை விளக்கம் வரை**
**அழகுபடுத்தப்பட்ட சென்னை மெரினா கடற்கரை!**

# துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் முதலமைச்சர் கலைஞர் திறந்து வைத்தார்!

சென்னை மாநகரை அழகுபடுத்தும் நோக்கிலும், சுற்றுலா பயணிகளைக் கவரும் நோக்கிலும் 100 கோடி ரூபாய் செலவில் 'அடையாறு பூங்கா' அமைக்கப் படுவதுடன், கடந்த மூன்றரை ஆண்டுகளில் 48 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளிலும் 380 இடங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 12 கோடி ரூபாய் செலவில் 100 சிறிய பூங்காக்களும், டாக்டர் நடேசன் பூங்கா, டாக்டர் விஸ்வேஸ்வரய்யா கோபுர பூங்கா, பனகல் பூங்கா ஆகிய சிறப்பு வாய்ந்த பூங்காக்களும் மேம்படுத்தப் படுகின்றன.

உலகின் மிகப்பெரிய கடற்கரைகளில் ஒன்றாகிய சென்னைக் கடற்கரையின் ஒரத்தில் 1884ஆம் ஆண்டில் அப்போதைய ஆளுநர் மவுண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் கிராண்ட் டஃப் என்பவர்தான் முதன்முதலில் அழகான நடைபாதையை அமைத்து, "மெரினா" என்று பெயரிட்டவர். அதன்பின்னர் மெரினாவை அழகுபடுத்தும் முயற்சிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட போதிலும், முழுமையான கண்ணோட்டத்தில் ஒருங்கிணைந்த முறையில் இதுவரை எந்த ஒரு திட்டமும் செயல்படுத்தப்பட்டதில்லை. இக்குறையைப் போக்கி, உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும் சென்னை வரும் பயணிகள் விரும்பிப் பார்க்கும் இடமாக விளங்கும் மெரினா கடற்கரையை அழகுபடுத்திட முடிவு செய்து, சென்னை மாநகராட்சியின் வாயிலாக அதற்குரிய பணிகள் மேற்கொள்ளப்படும் என 2007–2008 நிதிநிலை அறிக்கையில் இந்த அரசு அறிவித்தது. அந்த அறிவிப்பின் பயனாக, சென்னை மாநகராட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளில் முதற்கட்டமாக, சென்னை கோட்டையின் எதிரில் 10 கோடி ரூபாய் செலவில் பொலிவோடு உருவாக்கப்பட்ட பூங்காவை 29.5.2009 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, நேப்பியர் பாலம் முதல் கலங்கரை விளக்கம் வரை 3.10 கி.மீ. நீளமுள்ள மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் பணி 2008 பிப்ரவரியில் தொடங்கப்பட்டு, காண்போரைக் கவரும் வண்ணம் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதாவது, உழைப்பாளர் சிலை முதல் கலங்கரை விளக்கம் வரை மெரினா கடற்கரைப்பகுதி 14 அமர்விடப் பகுதிகளாக நில வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. பசுமைப் புல்வெளிகள் கொண்ட இந்த 14 அமர்விடப் பகுதிகளிலும் பல்வேறு வண்ணங்களில் ஓடுகளும், சுவர்ப்பகுதிகளில் கிரானைட் கற்களும் பதிக்கப் பட்டுள்ளன.

நவீன பெர்கோலாக்கள், செயற்கை நீரூற்றுகள் ஆகியவைகளும் அமைக்கப்பட்டுள்ளன. வீசும் அலைகளுடன் கடற்காட்சியைக் கண்டு மகிழத்தக்கதாக அமர்விடங்களில் இருக்கைகளும், கலைநயமிக்க அமர்வு படிக்கட்டுகளும் கண்கவர் வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளன.

நடைபயிற்சி மேற்கொள்வதற்காக பல்வேறு வண்ணங்களில் சிமெண்ட் கற்களால் 4 மீட்டர் அகலம் கொண்ட நடை பாதைகளுடன், காமராஜர் சாலையின் கிழக்கு ஓரத்தில் நடந்து செல்வோர்க்கு வசதியாக 5 மீட்டர் அகலத்தில் கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதையும், அதனையொட்டி அழகிய வடிவுடைய கருங்கல் தூண்களில் இணைக்கப்பட்ட ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினால் ஆன கைப்பிடித் தடுப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகள், தமிழ்ச் சான்றோர்கள், பெருந்தலைவர் காமராஜர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோரின் சிலைகள் அமைந்துள்ள பகுதிகள் கிரானைட் கற்கள் பதிக்கப்பட்டு சிலைகளின் மீது, ஒளிவீசும் வண்ணம் மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகப் பேருந்துகள், கார்கள், இரண்டு சக்கர வாகனங்களுக்கான நிறுத்துமிடங்கள், நவீன கழிப்பிடங்கள் ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளன. காமராஜர் சாலையில் பேருந்து பயணிகளுக்கு வசதியாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த எவர்சில்வர் நிழற்குடைகள் 10 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. கடற்கரையில் எண் கோண வடிவமுள்ள 428 கம்பங்களில் பொருத்தப்பட்டிருக்கும் விளக்குகள், கடற்பறவைகள் பறப்பது போன்று காட்சியளிக்கின்றன. கடற்கரை மணற்பரப்பில் ஒரே சீராக ஒளிவீசிடும்வகையில் போதுமான மின்விளக்குகள் உயர்கோபுர மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு, சென்னை மாநகருக்கு அழகையும், பொதுமக்களுக்கும், குழந்தைகளுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் மனமகிழ்ச்சியையும், மன நிறைவையும் அளிக்கத் தக்கதாக 25 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ள மெரினா கடற்கரையினை முதலமைச்சர் கலைஞர் இன்று (20.12.2009) காமராஜர் சாலை – காந்தி சிலை அருகில் நடைபெற்ற விழாவில் திறந்து வைத்தார். அத்துடன், இந்தச் சிறப்பு மிக்க பணிகளால் சென்னை மாநகர்க்குப் பெருமைசேர்க்கும் மெரினா கடற்கரை உலகின் முதன்மையான கடற்கரையாக விளங்கிட வாழ்த்துக்கூறி புதிய மரக் கன்றுகளையும் நட்டார்.

துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு.க. பொன்முடி, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆ. ராசா, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திருமதி. பூங்கோதை, மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு.க. இராமச்சந்திரன், சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

****

*வெளியீடு, இயக்குநர்,*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*தலைமைச் செயலகம், சென்னை-9*